පරිවාස හා ළමාරක්ෂක සේවා දෙපාර්තමේන්තුව
**நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்**
**DEPARTMENT OF PROBATION AND CHILD CARE SERVICES**
කාන්තා හා ළමා කටයුතු අමාත්‍යාංශය
பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அளமச்சு
Ministry of Women and Child Affairs


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது.இல<br>My Number | PCC/03/05/WCD/06/2025 | ඔබේ අංකය<br>உமது.இல<br>Your Number | | දිනය<br>திகதி<br>Date | 2025.09.18 |

**திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் : PCC/01/2025**

செயலாளர் - பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

செயலாளர் - மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு

செயலாளர் - கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

செயலாளர் - பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சு

செயலாளர் - புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சு

செயலாளர் - போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு

**உலக சிறுவர் தின தேசிய வாரத்தின் நிகழ்ச்சித்திட்டம் - 2025 – "அன்புடன் காப்போம் - உலகை வெல்வோம்"**

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்தின் தலைமையில், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் வழிகாட்டலில் உலக சிறுவர் தின தேசிய வாரத்தைப் பிரகடனப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சிறுவர் தொடர்பாக செயலாற்றுகின்ற அமைச்சுக்கள்/திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் ஒத்துழைப்புக்களுடன் பிள்ளைகளின் உயரிய நலனைக் கருத்தில் கொண்டு 2025.09.25 தொடக்கம் 2025.10.01 வரையான வாரத்தில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் :-**

- ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயத்தை (UNCRC) ஏற்று அங்கீகரித்துள்ள உறுப்பு நாடாக, இலங்கையானது சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளது. உலக சிறுவர் தின தேசிய வாரமாக பெயரிட்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை வாரம் முழுவதும் நடைமுறைப்படுத்துவதன் மூலம், சிறுவர் உரிமைகள் தொடர்பாக விரிவான தெளிவூட்டலை சமூகத்தில் ஏற்படுத்தல்.


බී කොටස, 03 වන මහල , සෙත්සිරිපාය IIවන අදියර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
"பீ"பிரிவு,03ம் மாடி,ஐஜம் தொகுதி,செத்சிரிபாய,பத்தரமுல்லை, இலங்கை.
**WingB, 03rd Floor, Sethsiripaya Stage II,Battaramulla, Sri Lanka**
විද්‍යුත් තැපැල/மின்னஞ்சல் /**E-mail: pcc@sltnet.lk**
වෙබ්/இணையம்/ **Web : www.probation.gov.lk**
කාර්යාලය/காரியாலயம் /**Office :**0112186062
ෆැක්ස්/ தொலைநகல்/**Fax :** 011 **2187285/ 011 2186065**

- சிறுவர் தினக் கொண்டாட்டத்தை ஒரு தினத்தில் மாத்திரம் மட்டுப்படுத்தாமல், சிறுவர்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து சிறுவர் தின தேசிய வாரத்தில் பல்வேறு செயற்பாடுகளை உள்ளடக்கிய பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதன் மூலம், சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உரியவாறான செயற்பாடுகளை ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் மேற்கொள்ளல்.
- நடைமுறைச் சாத்தியமான செயற்பாடுகளுடன் கூடிய அர்த்தமுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை மேற்கொள்வதன் மூலம் சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற நாடொன்றை உருவாக்குவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குதல்.

**2025 உலக சிறுவர் தினத்தின் தொனிப்பொருள் :- "அன்புடன் காப்போம் - உலகை வெல்வோம்"**

**உலக சிறுவர் தின இலச்சினை**



1. ***முதலாம் நாள் - 2025.09.25***

**நிகழ்ச்சித்திட்டம் -** சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் பாடசாலை அதிபர்களின் வகிபாங்கு தொடர்பாகத் தெளிவூட்டல்.

**நடைமுறைப்படுத்தும் நிறுவனம் -** கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் வழிகாட்டலில் மாகாணக் கல்விக் கல்வித் திணைக்களம் மற்றும் வலயக் கல்விப் பணிமனைகள் மூலமாக

**நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** – 100

**நோக்கங்கள் :-**

- சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு பாடசாலைகளில் அதிபர்மார்களின் பணிப்பொறுப்புக்களை அறிமுகப்படுத்தல்.
- சிறுவர்கள் தொடர்பான சட்டங்கள் பற்றிய தெளிவூட்டல்களை வழங்குவதன் மூலம், பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூகத்திலுள்ள சிறுவர்களுக்கு இடம்பெறுகின்ற வன்முறைகளைக் குறைப்பதற்கு அதிபர்மார் உள்ளிட்ட பாடசாலை ஆசிரியர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளல்.
- பிள்ளைகளுக்குத் தேவையான ஏனைய உதவிச் சேவைகளை வழங்குவதற்காக அதிபர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளல்.
- சிறுவர் உரிமைகள் தொடர்பாக அதிபர்களின் அறிவு விருத்தி செய்தல்.
- இடர்களுக்கு ஆளாகக்கூடிய பிள்ளைகளை அடையாளங்கண்டு அதற்குத் தேவையான தலையீடுகளை மேற்கொள்ளல் மற்றும் கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுவை (VCDC) நடாத்திச் செல்வதற்கான அதிபர்மார் உள்ளிட்ட ஆசிரியர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளல்.

**பொறிமுறை :-**

- கல்விவலய மட்டத்தில் அனைத்து அதிபர்மார்களையும் தெளிவுபடுத்தல்.
- தகுந்த ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்வதற்காக பொறிமுறையொன்றை உருவாக்கிக் கொள்ளல் (வலயத்திலுள்ள பாடசாலைகள் மற்றும் சிறுவர்கள் தொடர்பாக இயங்குகின்ற நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள்)

**காலம் :-** உயர்ந்தபட்சம் 02 மணித்தியாலயங்கள்

**தெளிவுபடுத்த வேண்டிய விடயங்கள் :-**

**அறிமுகம்**

- ➢ சிறுவர் என்பவர் யார்?
- ➢ சிறுவர்கள் தொடர்பான சட்டங்கள் என்ன?
- ➢ சிறுவர் உரிமைகளின் கோட்பாடு (சிறுவர்களின் உயரிய நலன், பாரபட்சம் காட்டாமை, நல்லிருப்பு மற்றும் அபிவிருத்தி, சிறுவர்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமையளித்தல்)
- ➢ சிறுவர்கள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களை கீழ்க்காணும் துறைகளில் தெளிவுபடுத்தல்

**i) சிறுவர்களின் அபிவிருத்தி**

பாடசாலையில் அல்லது வெளிச் சமூகத்தில் அல்லது தொடர்புபடும் சிறுவர்கள் பற்றி அதிபர்மாரின்/ஆசிரியர்களின் பணிப்பொறுப்புக்கள்.

உதாரணம்:- பிறப்புச் சான்றிதழ் இல்லாத பிள்ளைகளை அடையாளங் காணல் மற்றும் தகவல்களை வழங்கல், பாடசாலை இடைவிலகியுள்ள பிள்ளைகளின் தகவல்களை வழங்குகின்ற பொறிமுறையைத் தயாரித்தல் மற்றும் தலையிடுதல், பாதுகாப்பற்ற சிறுவர்கள் பற்றிய தகவல்களை வழங்கல்.

**ii) சிறுவர்களின் பாதுகாப்பு**

பாதுகாப்பற்ற சிறுவர்கள்/பொறுப்புகளற்ற பெற்றோர்கள் பற்றிய தகவல்கள் தெரியவந்திருப்பின், குறித்த தகவல்களை சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்/உதவி உத்தியோகத்தருக்கு வழங்குவதன் மூலம் பாதுகாப்பற்ற நிலைமைகளைக் குறைப்பதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கல்.

கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுவுக்கு (VCDC) அதிபர்மார்களாக வழங்கக்கூடிய ஒத்துழைப்புக்கள்.

**iii) சிறுவர்களின் நல்லிருப்பு**

சிறுவர் உரிமைகள் மீறப்படுவதற்கான காரணங்கள் மற்றும் குறித்த நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள்.

**iv) சிறுவர்களின் பங்கேற்பு**

எந்தவொரு செயற்பாட்டின் போதும், பிள்ளைகளின் கருத்துக்களைக் கேட்டறிவதிலுள்ள முக்கியத்துவம் மற்றும் சிறுவர் கழக வேலைத்திட்டத்தை ஊக்குவிப்பதற்காக அதிபர்மார்கள் வழங்கக்கூடிய பங்களிப்புக்கள்.

உதாரணம் :- ரொஜர் ஹார்ட்டின் பங்களிப்புப் படிக்கட்டு (Roger Hart's Ladder of Participation) முறையைப் பயன்படுத்தி பிள்ளைகளின் பங்கேற்பை அர்த்தமுள்ளதாகப் பெற்றுக்கொள்ளல்

*2. **<u>இரண்டாம் நாள் - 2025.09.26</u>***

**நிகழ்ச்சித்திட்டங்கள்**

1. பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற மோட்டார் வாகனங்களை நாடளாவிய ரீதியில் சோதனை செய்தல் மற்றும் ஸ்ரிக்கர் ஒட்டுதல்
2. பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுவை உருவாக்குதல் மற்றும் மீளமைத்தல்

**நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் -** தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சு, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, இலங்கை பொலிசு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

**நோக்கங்கள் :-**

- பிள்ளைகளுக்கு பாதுகாப்பான சேவைகளை வழங்கல்

- அனைத்து பாடசாலைகளிலும் சிறுவர் பாதுகாப்புக் குழுவை உருவாக்குதல் மற்றும் முனைப்புடன் நடாத்திச் செல்லல்.

தகுந்த தரநியமங்களுடன் கூடிய பிள்ளைகளின் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற வாகனங்களை அடையாளங் காண்பதற்கு ஸ்ரிக்கர் ஒன்றை ஒட்டுவதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சு, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, இலங்கை பொலிசு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு போன்ற நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல்.

- பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழு உருவாக்கப்படாமல் இருக்கின்ற பாடசாலைகளில் குழுவை உருவாக்குதல் மற்றும் செயலிழந்து போயுள்ள குழுக்களை மீள்கட்டமைத்தல்.

**காலம் :-** 2025.09.26 தொடக்கம் 2025.10.01 வரையான வாரத்தில்

3. ***மூன்றாம் நாள் - 2025.09.27***

**நிகழ்ச்சித்திட்டம் -** சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் முன்பள்ளி ஆசிரியர்களின் வகிபாங்கு பற்றி முன்பள்ளி ஆசிரியர்களைத் தெளிவூட்டல்.

**நடைமுறைப்படுத்தும் நிறுவனம் -** முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தேசிய செயலகம்

**நோக்கங்கள் :-**

- முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள் பிள்ளையொருவரின் சமூகமயப்படுத்தப்படுத்தலில் முக்கிய இடமாக இருக்கின்றமையால், சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக முன்பள்ளி ஆசிரியர்களின் பணிப்பொறுப்புக்களை அடையாளங் காணல்
- சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முன்பள்ளி ஆசிரியர்களின் பணிப்பொறுப்புக்களை அறிமுகப்படுத்தல்
- சிறுவர்கள் தொடர்பான சட்டங்கள் பற்றிய தெளிவூட்டல்களை வழங்குவதன் மூலம், பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூகத்திலுள்ள சிறுவர்களுக்கு இடம்பெறுகின்ற வன்முறைகளைக் குறைப்பதற்கு முன்பள்ளி ஆசிரியர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளல்.
- பிள்ளைகளுக்குத் தேவையான ஏனைய உதவிச் சேவைகளை வழங்குவதற்காக முன்பள்ளி ஆசிரியர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளல்.
- சிறுவர் உரிமைகள் தொடர்பாக முன்பள்ளி ஆசிரியர்களின் அறிவு விருத்தி செய்தல்.
- இடர்களுக்கு ஆளாகக்கூடிய பிள்ளைகளை அடையாளங் கண்டு அதற்குத் தேவையான தலையீடுகளை மேற்கொள்வதற்காக முன்பள்ளி ஆசிரியர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளல்.

**பொறிமுறை :-**

- பிரதேச செயலக மட்டங்களில் அனைத்து முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களின் ஆசிரியர்களைத் தெளிவூட்டல்

- தகுந்த ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்வதற்காக பொறிமுறையொன்றை உருவாக்கிக் கொள்ளல் (வலயத்திலுள்ள முன்பள்ளிகள் மற்றும் சிறுவர்கள் தொடர்பாக இயங்குகின்ற நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள்)
- சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்/உதவி உத்தியோகத்தர் அல்லது பொருத்தமான வளவாளர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொண்டு நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்.

**காலம் :-** உயர்ந்தபட்சம் 02 மணித்தியாலயங்கள்

**தெளிவுபடுத்த வேண்டிய விடயங்கள் :-**

**அறிமுகம்**

- ➢ சிறுவர் என்பவர் யார்?
- ➢ சிறுவர்கள் தொடர்பான சட்டங்கள் என்ன?
- ➢ சிறுவர் உரிமைகளின் கோட்பாடு (சிறுவர்களின் உயரிய நலன், பாரபட்சம் காட்டாமை, நல்லிருப்பு மற்றும் அபிவிருத்தி, சிறுவர்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமையளித்தல்)
- ➢ சிறுவர்கள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களை கீழ்க்காணும் துறைகளில் தெளிவுபடுத்தல்

**i) சிறுவர்களின் அபிவிருத்தி**

முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களில் அல்லது வெளிச் சமூகத்தில் அல்லது தொடர்புபடும் சிறுவர்கள் பற்றி முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களிலுள்ள ஆசிரியர்களின் பணிப்பொறுப்புக்கள்.

உதாரணம்:- பிறப்புச் சான்றிதழ் இல்லாத பிள்ளைகளை அடையாளங் காணல் மற்றும் தகவல்களை வழங்கல், பாடசாலை இடைவிலகியுள்ள பிள்ளைகளின் தகவல்களை வழங்குகின்ற பொறிமுறையைத் தயாரித்தல் மற்றும் தலையிடுதல், பாதுகாப்பற்ற சிறுவர்கள் பற்றிய தகவல்களை வழங்கல்.

**ii) சிறுவர்களின் பாதுகாப்பு**

பாதுகாப்பற்ற சிறுவர்கள்/பொறுப்பற்ற வகையில் நடந்து கொள்கின்ற பெற்றோர்கள் பற்றிய தகவல்கள் தெரியவந்திருப்பின், குறித்த தகவல்களை சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்/உதவி உத்தியோகத்தருக்கு வழங்குவதன் மூலம் பாதுகாப்பற்ற நிலைமைகளைக் குறைப்பதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கல்.

கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுவுக்கு (VCDC) முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களிலுள்ள ஆசிரியர்களாக வழங்கக்கூடிய ஒத்துழைப்புக்கள்.

**iii) சிறுவர்களின் நல்லிருப்பு**

சிறுவர் உரிமைகள் மீறப்படுவதற்கான காரணங்கள் மற்றும் குறித்த நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள்.

**iv) சிறுவர்களின் பங்கேற்பு**

எந்தவொரு செயற்பாட்டின் போதும், பிள்ளைகளின் கருத்துக்களைக் கேட்டறிவதிலுள்ள முக்கியத்துவம் மற்றும் சிறுவர் கழக வேலைத்திட்டத்தை ஊக்குவிப்பதற்காக அதிபர்மார்கள் வழங்கக்கூடிய பங்களிப்புக்கள்.

4. ***நான்காம் நாள் - 2025.09.28***

**நிகழ்ச்சித்திட்டம் -** பிள்ளைகள் போதைப்பொருள் பாவனைக்கு உட்படுவதைத் தடுத்தல் பற்றி சமூகத்தைத் தெளிவுபடுத்தல்

**நடைமுறைப்படுத்தும் நிறுவனம் -** இலங்கை பொலிசு, அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் (ADIC)

**நோக்கங்கள் :-**

- பிள்ளைகள் போதைப்பொருள் பாவனைக்கு இரையாகின்ற இடர்களைக் குறைத்தல்
- போதைப்பொருள் பாவனையால் ஏற்படுகின்ற தீமைகள் பற்றி சமூகத்தவர்களின் விழிப்புணர்வை விருத்தி செய்தல் மற்றும் சமூகத்தை வலுவூட்டல்.
- போதைப்பொருள் தடுப்புப் பற்றி சமூகத்தவர்களின் அறிவை விருத்தி செய்தல்
- பிள்ளைகள் போதைப்பொருளற்ற சூழலில் வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்தும் முக்கியத்துவம்பற்றி சமூகத்தைத் தெளிவூட்டல்
- சிறுவர்கழக நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமாக, பிள்ளைகள் போதைப்பொருட்களின் பாவனைக்கு ஆளாவதைத் தடுப்பதற்காக பிள்ளைகளை வலுவூட்டுதல்.

**பொறிமுறை :-**

- பிள்ளைகள் போதைப்பொருள் பாவனைக்கு இரையாவதைத் தடுப்பதற்காக பிரதேச செயலக மட்டத்தில் சமூகத்தவர்களைத் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கமைய, மதுசாரம், போதைப்பொருள் மற்றும் புகையிலைப் பாவனையிலிருந்து விடுபட்டிருப்பதற்கான பிள்ளைகளுக்குரிய உரிமை பற்றி சிறுவர்களை வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை சிறுவர்கழக சிறுவர்களுடன் இணைந்து மேற்கொள்ளல்.
- இந்நிகழ்ச்சித்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, சிறுவர் கழக வேலைத்திட்டங்களை முனைப்பாக மேற்கொள்வதற்கு அதிக பங்களிப்புக்களை வழங்கிய சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்/உதவி உத்தியோகத்தர்களை அடையாளங்கண்டு குறித்த அலுவல்களைப் பாராட்டுதல்

**காலம் :-** உயர்ந்தபட்சம் 02 மணித்தியாலயங்கள்

**தெளிவுபடுத்த வேண்டிய விடயங்கள் :-**

**அறிமுகம்**

- ➢ போதைப்பொருள் பாவனையால் ஏற்படுகின்ற தீமைகள் என்ன?

- பிள்ளைகள் போதைப்பொருள் பாவனைக்கு ஆளாவதைத் தடுப்பதற்கு சமூகத்தவர்களுக்குள்ள பணிப்பொறுப்புக்கள்
- போதைப்பொருள் பாவனைக்கு ஆளாவதைக் குறைப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் பற்றித் தெளிவூட்டல்
- போதைப்பொருள் தடுப்பை மேற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தல்

**i) சிறுவர்களின் அபிவிருத்தி**

குடும்பத்திலும், வெளிச்சமூகத்திலும் சந்திக்கின்ற பாதுகாப்பற்ற சிறுவர்கள் பற்றி சமூகத்தவர்களுக்கு மேற்கொள்ளக்கூடிய பணிகள்

உதாரணம்:- பாடசாலை இடைவிலகிய பிள்ளைகள் பற்றிய தகவல்களை வழங்கல், பாதுகாப்பற்ற சிறுவர்கள் பற்றிய தகவல்களை வழங்கல்.

**ii) சிறுவர்களின் பாதுகாப்பு**

பாதுகாப்பற்ற சிறுவர்கள்/ பொறுப்பற்ற வகையில் நடந்து கொள்கின்ற பெற்றோர்கள் பற்றிய தகவல்கள் தெரியவந்திருப்பின், குறித்த தகவல்களை சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்/உதவி உத்தியோகத்தருக்கு வழங்குவதன் மூலம் பாதுகாப்பற்ற நிலைமைகளைக் குறைப்பதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கல்.

**iii) சிறுவர்களின் நல்லிருப்பு**

சிறுவர் உரிமைகள் மீறப்படுவதற்கான காரணங்கள் மற்றும் குறித்த நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள்.

**iv) சிறுவர்களின் பங்கேற்பு**

எந்தவொரு செயற்பாட்டின் போதும், பிள்ளைகளின் கருத்துக்களைக் கேட்டறிவதிலுள்ள முக்கியத்துவம் மற்றும் சிறுவர் கழக வேலைத்திட்டத்தை ஊக்குவிப்பதற்காக அதிபர்மார்கள் வழங்கக்கூடிய பங்களிப்புக்கள்.

5. ***ஐந்தாம் நாள் - 2025.09.29***

**நிகழ்ச்சித்திட்டங்கள்**

1. சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் சமயத் தலைவர்களின் பணிப்பொறுப்புக்கள் பற்றி தெளிவூட்டல்
2. குடும்பத்தாருடனான மகிழ்ச்சியூட்டும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடாத்துதல்

**நடைமுறைப்படுத்தும் நிறுவனம் -** புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சு

**1.1 சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் சமயத் தலைவர்களின் பணிப்பொறுப்புக்கள் பற்றி தெளிவூட்டல்**

**நோக்கங்கள் :-**

- சமயத் தலைவர்கள் சமூகத்தவர்களால் பெரிதும் மதிக்கபடுவதால், சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் சமயத் தலைவர்களின் பணிப்பொறுப்புக்களை அறிமுகப்படுத்தல்
- சிறுவர்கள் தொடர்பான சட்டங்கள் பற்றிய தெளிவூட்டல்களை வழங்குவதன் மூலம், பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூகத்திலுள்ள சிறுவர்களுக்கு இடம்பெறுகின்ற வன்முறைகளைக் குறைப்பதற்கு சமயத்தலைவர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளல்.
- பிள்ளைகளுக்குத் தேவையான ஏனைய உதவிச் சேவைகளை வழங்குவதற்காக சமயத் தலைவர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளல்.
- சிறுவர் உரிமைகள் தொடர்பாக சமயத் தலைவர்களின் அறிவு விருத்தி செய்தல்.
- இடர்களுக்கு ஆளாகக்கூடிய பிள்ளைகளை அடையாளங் கண்டு அதற்குத் தேவையான தலையீடுகளை மேற்கொள்வதற்காக சமயத் தலைவர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளல்.

**பொறிமுறை :-**

- பிரதேச செயலக மட்டங்களில் அனைத்து வணக்கத்தலங்களையும் உள்ளடக்கிய வகையில் சமயத் தலைவர்களை பொது இடமொன்றில் தெளிவூட்டல்
- தகுந்த ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்வதற்காக பொறிமுறையொன்றை உருவாக்கிக் கொள்ளல் (வலயத்திலுள்ள முன்பள்ளிகள் மற்றும் சிறுவர்கள் தொடர்பாக இயங்குகின்ற நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள்)
- வணக்கத்தலங்களுக்கு வருகைதரும் சமூகத்தவர்களை இலக்குவைத்து சிறுவர்கள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கான முறையை உருவாக்கிக் கொள்ளல்.
- பிரதேச செயலக மட்டத்திலுள்ள பிள்ளைகள் தொடர்பான முக்கிய பிரச்சினைகளை அடையாளங் காண்பதற்கு மற்றும் அவற்றைக் குறைத்துக் கொள்வதற்கு சமயத் தலைவர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய முறையை உருவாக்குதல்
- சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்/உதவி உத்தியோகத்தர் அல்லது பொருத்தமான வளவாளர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொண்டு நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்.

**காலம் :-** உயர்ந்தபட்சம் 02 மணித்தியாலயங்கள்

**தெளிவுபடுத்த வேண்டிய விடயங்கள் :-**

**அறிமுகம்**

- சிறுவர் என்பவர் யார்?
- சிறுவர்கள் தொடர்பான சட்டங்கள் என்ன?
- சிறுவர் உரிமைகளின் கோட்பாடு (சிறுவர்களின் உயரிய நலன், பாரபட்சம் காட்டாமை, நல்லிருப்பு மற்றும் அபிவிருத்தி, சிறுவர்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமையளித்தல்)

➢ சிறுவர்கள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களை கீழ்க்காணும் துறைகளில் தெளிவுபடுத்தல்

**i) சிறுவர்களின் அபிவிருத்தி**

பாடசாலையில் அல்லது வெளிச் சமூகத்தில் சந்திக்கின்ற பிள்ளைகள் பற்றி சமயத் தலைவர்களுக்கு மேற்கொள்ளக்கூடிய பணிப்பொறுப்புக்கள்.

உதாரணம்:- பிறப்புச் சான்றிதழ் இல்லாத பிள்ளைகளை அடையாளங் காணல் மற்றும் தகவல்களை வழங்கல், பாடசாலை இடைவிலகியுள்ள பிள்ளைகளின் தகவல்களை வழங்குகின்ற பொறிமுறையைத் தயாரித்தல் மற்றும் தலையிடுதல், பாதுகாப்பற்ற சிறுவர்கள் பற்றிய தகவல்களை வழங்கல்.

**ii) சிறுவர்களின் பாதுகாப்பு**

பாதுகாப்பற்ற சிறுவர்கள்/ பொறுப்பற்ற வகையில் நடந்து கொள்கின்ற பெற்றோர்கள் பற்றிய தகவல்கள் தெரியவந்திருப்பின், குறித்த தகவல்களை சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்/உதவி உத்தியோகத்தருக்கு வழங்குதல் மற்றும் அவ்வாறான நிலைமைகளைக் குறைப்பதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கல்.

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சிறுவர்கழக வேலைத்திட்டங்களுக்கு சமயத் தலைவர்களாக வழங்கக்கூடிய ஒத்துழைப்புக்கள்

பிள்ளைகள் பற்றி பெற்றாரின் பொறுப்புக்கள் மற்றும் பெற்றார் பிள்ளைகள் தொடர்புகளிலுள்ள முக்கியத்துவம் பற்றி அறங்காவலர்/பக்தர்களை தெளிவுபடுத்தல்.

உதவிகள் தேவையான பிள்ளைகளுக்கு உதவிகளை வழங்குவதற்கு சமூகத்தவர்களின் மனங்களை கூருணர்வுப்படுத்துவதற்கான சமயம் சார்ந்த விடயங்களைத் தெளிவுபடுத்தி பிள்ளைகள் மீதான பொறுப்புக்களைக் கொண்டுள்ள சமூகத்தை உருவாக்குவதற்கு சமயத் தலைவர்களுக்கு தலைமைத்துவம் வழங்கலாம்.

**iii) சிறுவர்களின் நல்லிருப்பு**

சிறுவர் உரிமைகள் மீறப்படுவதற்கான காரணங்கள் மற்றும் குறித்த நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள்.

**iv) சிறுவர்களின் பங்கேற்பு**

ஒரு சிறுவர் துறவு வாழ்வுக்கு காலடி எடுத்து வைக்கும் போது, அல்லது வணக்கத்தலங்களில் நடாத்தப்படுகின்ற சிறுவர் செயற்பாடுகள் அல்லது நிகழ்ச்சித்திட்டங்களில் பிள்ளைகளின் கருத்துக்களைக் கேட்டறிவதன் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தல்

சிறுவர்கழக வேலைத்திட்டங்களை ஊக்குவிப்பதற்கு வணக்கத்தலங்களில் வழங்கக்கூடிய ஒத்துழைப்புக்களைத் தெளிவுபடுத்தல்

***கவனிக்க வேண்டியது : எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு மதத்திற்கும் மதரீதியான காழ்ப்புணர்வு/குற்றஞ்சாட்டுதல் அல்லது சர்ச்சைகளை ஏற்படுத்துகின்ற விடயங்களை முன்வைப்பதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். குறிப்பாக பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல் பற்றி மாத்திரமே கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.***

**2.1 குடும்பத்தாருடனான மகிழ்ச்சியூட்டும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடாத்துதல்**

**நிகழ்ச்சித்திட்டம் -** குடும்பத்தாருடனான மகிழ்ச்சியூட்டும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடாத்துதல்

**நடைமுறைப்படுத்தும் நிறுவனம் -** கலாச்சார விவகாரங்கள் திணைக்களம்

**நோக்கங்கள் :-**

- குடும்பம் எனும் எண்ணக்கருவின் வரைவிலக்கணம் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி பிள்ளைகள் மற்றும் சமூகத்தைத் தெளிவுபடுத்தல்
- பரஸ்பர நல்லுறவு, கூட்டாக செயற்படுதல் போன்ற மனிதப் பண்புகளை விருத்தி செய்து கொள்வதன் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தல்
- பிள்ளைநேய குடும்பச் சூழலை உருவாக்குதல்
- பிள்ளைகள் குடும்பத்திலிருந்து பிரிந்து செல்வதைத் தடுத்து குடும்பத்திலேயே பாதுகாப்பளித்தல்

**பொறிமுறை**

- ➢ கலாச்சார விவகாரங்கள் திணைக்களத்தின் தலைமையில் 219 கலாச்சார நிலையங்களை இலக்காகக் கொண்டு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், முதியோர் இல்லங்கள், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை மையமாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள், சித்திரப் போட்டிகள், இசை நிகழ்ச்சிகளை நடாத்துதல

**காலம் :-** உயர்ந்தபட்சம் 02 மணித்தியாலயங்கள்

**தெளிவுபடுத்த வேண்டிய விடயங்கள் :-**

- ➢ குடும்பத்திலுள்ள பல்வேறுபட்ட இயல்புகள் பற்றிய வரைவிலக்கணப்படுத்தல் குடும்பம் எனும் எண்ணக்கருவின் முக்கியத்துவம்
- ➢ ஒருவரிடம் மனிதப் பண்புகளை விருத்தி செய்து கொள்ள வேண்டியதன் அவசியம்
- ➢ கூட்டாக இயங்குதல், நல்லுறவு போன்ற ஆரோக்கியமான பண்புகள் மூலம் ஒருவரின் நடத்தையில் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள்
- ➢ ஆரோக்கியமான குடும்பச் சூழலை உருவாக்க வேண்டியதன் சமகாலத் தேவை

**வளவாளர்கள் :-** பிரதேச கலாச்சார நிலையங்கள் அமைந்துள்ள அதிகார எல்லைக்குள் காணப்படும் அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களை நிகழ்ச்சித்திட்டங்களில் இணைத்துக் கொண்டு பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் கொண்ட ஓய்வுநிலை அரச உத்தியோகத்தர்கள்

**ஒருங்கிணைப்பு :-** கலாச்சார உத்தியோகத்தர்கள்/கலாச்சார உதவியாளர்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் மகளிர் மற்றும் சிறுவர் அலகுகளின் உத்தியோகத்தர்கள்

6. ***ஆறாம் நாள் - 2025.09.30***

**நிகழ்ச்சித்திட்டம் -** சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் (01 – 05 ஆம் தரம்)

**நடைமுறைப்படுத்தும் நிறுவனம் -** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

**நோக்கங்கள் :-**

- டிஜிட்டல் திரைகளுக்கு அடிமைப்படுவதைத் தடுப்பது பற்றி பாடசாலை மாணவர்களைத் தெளிவுபடுத்தல்
- உரிய போசாக்கைப் பேணுவதன் முக்கியத்துவம் பற்றி மாணவர்களைத் தெளிவுபடுத்தல்
- ஆரோக்கியமான நடத்தைகளைப் பேணுவதற்கு பிள்ளைகளைத் தூண்டுவித்தல்
- ஆரோக்கியமான வாழ்வின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தல்
- ஆசிரியர்கள் வகுப்பறையிலுள்ள மாணவர்களின் சுகாதார நிலைமைகள் பற்றி அறிந்து கொள்வதன் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தல்

**பொறிமுறை :-**

- சுகாதார அமைச்சால் தயாரிக்கப்பட்டுள்ள 30 நிமிட காணொளியைப் பாடசாலைகளில் 1 ஆம் தரம் தொடக்கம் 05 ஆம் தரம் வரையான மாணவர்களுக்கு காண்பித்தல்
- காணொளியைக் காணப்பிப்பதற்கு வசதிகள் இல்லாத பாடசாலைகளில் காணொளியின் உள்ளடக்கத்தைக் கதையாகக் கூறல்
- உடற்திணிவுச் சுட்டெண்ணை அந்தந்த பிள்ளைகள் தாங்களாகவே அளவிடுவதற்கும்/குறித்துக் கொள்வதற்குமான முறையை உருவாக்கல் மற்றும் அதனை வகுப்பறைச் செயற்பாடாக மேற்கொள்ளல்

**காலம் :-** 30 நிமிடங்கள்

7. ***ஏழாம் நாள் - 2025.10.01***

**நிகழ்ச்சித்திட்டம் -** உலக சிறுவர் தின தேசிய வைபவம்

**இடம் :-** அலரி மாளிகை

**08. வாரம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

**நிகழ்ச்சித்திட்டங்கள் :-**

01. பாதுகாப்பற்ற சிறுவர்களை அடையாளங் காணல்
02. வீதியோரச் சிறுவர்களை தேடல்

**நடைமுறைப்படுத்தும் நிறுவனம் -** இலங்கை பொலிசு

**நோக்கங்கள் :-**

- பாதுகாப்பற்ற சிறுவர்களை அடையாளங் காணல்
- வீதியோரச் சிறுவர்களை தேடல்

**பொறிமுறை :-**

- 2025.09.25 தொடக்கம் 2025.10.01 வரை வாரம்முழுவதும் நாடளாவிய ரீதியில் பாதுகாப்பற்ற சிறுவர்களை அடையாளங் காணல் மற்றும் வீதியோரச் சிறுவர்களை தேடல்

**காலம்:-** 2025.09.25 தொடக்கம் 2025.10.01 வரை

**கயனி கௌசல்யா விஜேசிங்க**
ஆணையாளர்

**பிரதிகள் -**

பொலிஸ்மா அதிபர் - இலங்கை பொலிசு

மாவட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலகம்

பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலகங்கள்

பணிப்பாளர் - கலாச்சார விவகாரங்கள் திணைக்களம்

பணிப்பாளர் - முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தேசிய செயலகம்

பணிப்பாளர் - இலங்கை பெண்கள் பணியகம்

பணிப்பாளர் - சுகாதார மேம்பாட்டுப் பணியகம்

தவிசாளர்- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

தவிசாளர் - தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

தவிசாளர் - தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

நிறைவேற்றுப் பணிப்பாளர்- மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்